தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 29, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 ஆகஸ்ட் 14, சனிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர். ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அறிவிப்பு

வேளாண்மை நிதிநிலை அறிக்கை, மின்-நிதிநிலை அறிக்கையாக அளித்தல்-மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழகத்தில் முதன்முறையாக "வேளாண்மை நிதிநிலை அறிக்கை" பேரவைக்கு இன்று அளிக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சட்டமன்றப் பேரவையின் இன்றைய நிகழ்வு, வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வறிக்கை, மின்–நிதிநிலை அறிக்கையாக மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவைக்கு அளிக்கப்படவுள்ளது. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் மேசைகளில் வைக்கப்பட்டுள்ள கையடக்க தொடுதிரைக் கணினி (Tablet) திரையில் இரண்டு PDF files உள்ளன. புத்தக வடிவில் படிப்பதற்கு வலது பக்கத்தில் காணும் PDF file அல்லது பெரிய எழுத்துக்களில் படிப்பதற்கு இடது பக்கத்தில் காணும் PDF file, இவற்றில் ஏதேனும் ஒன்றைத் திறக்க, எழுதுகோல் (ஸ்டைலஸ் பென்) உபயோகப்படுத்தியதும், திரையில் தோன்றும் சிறிய கட்டத்தில் கடவுச் சொல் (Password) 1111 என்று நான்கு முறை 1–ஐ பதிவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் சிறிய கட்டத்தில் கடவுச் சொல் (Password) நான்கு முறை 1–ஐ பதிவிடுமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைக்கு அளிக்கப்படவுள்ள வேளாண்மை நிதிநிலை அறிக்கையின் அச்சிடப்பட்ட பிரதிகள் தேவையெனக் கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள், முதல் தளத்தில் அமைந்துள்ள பேரவைச் செயலக அறையில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021–2022, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மைக்கென்று அமைந்திருந்த துறையை ‘உழவர் நலனின்றி உழவுத் தொழில் இல்லை’ என்கின்ற உன்னதமான உண்மையை உலகுக்கு உணர்த்தும்வகையில் ‘வேளாண்மை–உழவர் நலத் துறை’ என்று பெயர் மாற்றம் செய்து, வேளாண் பெருமக்களையெல்லாம் பெருமிதம் கொள்ள வைத்த பெருந்தகை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் முதல் வேளாண் நிதிநிலை அறிக்கையைப் பணிவுடன் அளித்து என் பணியைத் தொடர்கிறேன்.